# தமிழக கலைகள் குறித்த ஓர் ஆய்வு

*முனைவர் தேவகி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்பபேடு, சென்னை

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மே

வருடம்: 2025

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8983

## முன்னுரை

கலை என்பது உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படும். மனிதனின் உள்ளத்தை தன் வயமாக்கியதோடு நில்லாமல் நிரம்பி வழிந்து வெளிப்படும் ஆற்றலே கலை. அப்படிப்பட்ட கலைகளில் சில காவியமாகவும் ஓவியமாகவும் சிற்பமாகவும் இவ்வாறாக 64 கலைகளாக உள்ளன. அவற்றில் உள்ள சில கலைகள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## அறுபத்து நான்கு கலைகள் குறித்த ஓர் பார்வை

இந்து நூல்களிலும் சமண நூல்களிலும் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்கள் காணப்படுகின்றன.

1.ஆடல் 2.பாடல் 3.இசைக்கருவிகள் 4.வீணை 5.ஓவியம் 6.கவிதை 7.நிகண்டு 8.யாப்பு 9. அணிஇலக்கணம் 10.நாடகம் ஆடுதல் 11.செய்யுளின் ஓரடியைக்கொண்டு மற்ற அடிகளை நிரப்பி புதிய செய்யுள் செய்தல் 12.போட்டிகளில் ஒருவர் சொல்லும் செய்யுளின் இறுதி எழுத்தில் தொடங்கும் வேறொரு செய்யுளை சொல்லுதல் 13.புதிர்போல் அமைந்த பாக்களை செய்தல் 14.எளிதில் ஒளிக்கமுடியாத கடினம் அமைந்த பாக்களை படித்தல் 15.மறைபொருளாக செய்யுளின் பொருட்களை அமைக்கும் புதிர்வகை 16.பிறரை ஏமாற்றுவதற்கான செய்யுள் செய்தல் 17.பல நாட்டு மொழிகளை கற்றல் 18.கீழோர் மொழிகளை அறிதல் 19.நூல்களை அழகாகவும் தெளிவாகவும் படித்தல் 20.முன்பு படிக்காத நூலினை ஒருவருடன் கூடி படிக்கும் திறமை 21.மனதில் ஒரு செய்யுளை வைத்துக்கொண்டு சில குறிப்புக்களை மட்டும் ஒருத்தர் தர, மற்றவர் அச்செய்யுளை சொல்லுதல் 22.மனப்பாடம் செய்வதற்குரிய முறைகள் 23.மனையடி சாஸ்திரம் 24.தச்சுக்கலை 25.பருவங்களின் தட்பவெப்பநிலைக்கேற்ப தரையை மாற்றி அமைத்துக் கொள்வது 26.தோட்டக்கலை 27.அரிசி, பூ, முதலியவற்றால் ஆன கோலங்கள் 28.பலவகை தின்பண்டங்களை தயாரிப்பது 29.பலவகை குடிநீர்களை தயாரிப்பது 30.நூல் நெசவும் தையலும் 31.பாம்பு பின்னல் 32.பூவேலைகள் 33.மாலை கட்டுதல் 34.தலைக்கொண்டை முடிச்சு அலங்காரங்கள்

35. உடை அலங்காரம் 36.காதணிகள் 37. வாசனைப்பொருட்கள் 38. நகைகள் 39. உடம்பு பிடிப்பது, தலைமயிரை கோதிவிடுவது 40. உதட்டுக்கு வண்ணம் தீட்டுவது முகத்துக்கு ஏற்ப மண-நிறப்பொடிகளை பயன்படுத்துதல் 41. இலைகளில் தன் எண்ணத்தை தெரிவிக்கும் ஓவியங்கள்வெட்டி அவற்றை காதற் செய்தி அனுப்ப பயன்படுத்துதல் 42.-43. ஆண்களும் பெண்களும் சேர்ந்து நீராடும்பொழுது விளையாட்டாக நீரில் மிருதங்கம்போல் ஒலிகளை கிளப்பும் கலைகள்-இரண்டு, 44.-47 படுக்கை தயாரிப்பது முதல் இன்புற்றிருப்பதற்காக உதவியான கலைகள் 48. உலோகம் நாணயம் ரத்தினங்கள் இவற்றை மதிப்பிடுவது 49. இந்திரஜாலம் 50. பொருள்களை கையில் மறைப்பது 51. பொருள்களை துணியைக் கொண்டு மறைப்பது 52. இரசவாதம் 53. உலோகம் மணிகள் இருக்கும் நிலத்தை கண்டறிவது 54. சகுண அறிவு 55. எந்திரங்களை செய்வது 56.வீட்டில் கிளி மைனா முதலியவற்றை பேசபழகுவது 57. சூதாட்டம் 58. சொக்கட்டான் 59. ஆடு, கோழி முதலியவற்றை சண்டையிட செய்வது, 60. பொம்மைகளை கொண்டு குழந்தைகளுக்கு உரிய விளையாட்டுகளை செய்து காட்டுவது 61. கயிற்றைக்கொண்டு விளையாடுவது 62. நல்ல நடத்தைக்குறிய பயிற்சிகள் 63. யானையேற்றம் குதிரையேற்றம் முதலியன 64. நடைபயிற்சியும் வேட்டை பயிற்சியும் இவ்வாறாக அறுபத்து நான்கு வகையான கலைகள் இருப்பதாக கூறப்படுகிறது.

கலைஞனுக்கு சில இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அவை, கலைஞன் இயற்கை அமைப்புகளை கூர்ந்து கவனித்து அறிதல் வேண்டும். தன் நினைவில் தோன்றுவனவற்றை காவியமாகவோ ஓவியமாகவோ சிற்பமாகவோ வேறொன்றாகவோ வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். கலையும் பொருளையும் வாழ்க்கை முறையையும் நன்கு அறிந்து தெரிந்திருத்தல் வேண்டும். கலைஞன் சிறந்த ஒழுக்கம் பெற்றிருத்தல் வேண்டும். இவை அனைத்தும் ஒரு சேரப்பெற்றவனே சிறந்த கலைஞனாவான்.

## இரண்டாம் நூற்றாண்டின் கட்டிடக்கலை குறித்த ஓர் குறிப்பு

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை வாழ்ந்த காலத்தில் சோழர் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் அரண்மனை இருந்தது. அவ்வரண்மனைத் தோட்டத்தில் வியத்தகு வேலைபாடு அமைந்த பொன் மண்டபம் ஒன்று காட்சியளித்தது. அது மகத நாட்டு மணி வேலைக்காரராலும், மகாராட்டிரனத்தை சேர்ந்த பொற்கொல்லராலும்அவந்திநாட்டு கொல்லராலும் யவன நாட்டு தச்சராலும், தமிழகத்து கட்டட வல்லுநராலும் அமைக்கப்பட்டது மண்டபத் தூண்கள் பவளத்தால் இயன்றவை. மண்டபத்தின் ஒவ்வொரு கோணத்திலும் முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மண்டபத்தின் மேற்கூரை பொன் வேயப்பெற்றது. அம்மண்டபத்தின் தரை சந்தனம் கொண்டு மெழுகுபெற்றது. மணிமேகலையின் காவியம் இவ்விவரங்களைக் கூறுகிறது. இதன் மூலம் நாம் அறிவது என்னவென்றால் பண்டைய தமிழரசர்கள் மதகம், மகாராட்டினம், அவந்தி, யவனம் முதலிய அயல்நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது தெரியவந்தது. அந்தந்த இடத்தில் ஒரு துறை தொழிலாளர் சிறந்து விளங்கினார் என்று அறியமுடிகிறது. அத்தகைய சிறப்புடைய தொழிலாளரைத் தமிழ்வேந்தர் கட்டட வேலைகளுக்கு பயன்படுத்திக்கொண்டனர்.

## கற்கோவில்களில் கட்டடக்கலை

பல்லவர்கள் மலைச்சரிவுகளைக் குடைந்து சிறிய கோவில்களை அமைத்தனர்.

அவர்கள் அமைத்த குடவரை கோவில் 4 அல்லது 5 தூண்களைக் கொண்ட மண்டபம் மண்டபச் சுவரில் 3 அல்லது 5 புரைகள் வெட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு புரையிலும் கடவுளர் சிலை தனியே வைக்கப்பட்டிருக்கும் பாறையிலேயே வாயிற்காவலர் உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கும் மாமல்லபுரத்தில் உள்ள ஒவ்வொரு இரதமும் ஒற்றைக் கற்கோவில் ஆகும். ஒரே கல்லை கோவிலாக அமைத்த பெருமைதமிழகத்தில்பல்லவர்க்கேஉரியது. கல்லை கோவிலாக அமைப்பது எளிதான செயலா? ஒவ்வொரு வகை கோவிலும் ஒருவகை விமான அமைப்புடையது. மாமல்லபுத்துக்கோவில்களேஇவ்வுண்மைகளை விளக்க ஏற்ற சான்றுகள். இக்கோவில்கள் பல்லவர் கால கட்டடச் சிறப்பைப் "பார்" அறியச் செய்வனவாகும்.

### சோழர் காலத்தில் கட்டடக்கலையின் சிறப்பு

சோழர்கள் கட்டிய தஞ்சை பெரிய கோவிலும் கங்கை கொண்ட சோழேச்சரத்திலும் தாராசுரத்துச் சிவன் கோவிலும் திரிபுவன வீரேசுவரமும் சோழர் கால கட்டடக்கலைச் சிறப்பை நன்கு அறிவிப்பன ஆகும். உயர்ந்து, அகன்று, பகைவரைத் தாக்கும் நிலையில் அமைந்துள்ள மதில்கள் தஞ்சைப் பெரிய கோவிலிலும் கங்கை கொண்ட சோழேச்சரத்திலும் காணலாம். திருச்சுற்றுத் தரையைவிட உயர்த்திக்கட்டப்பெற்ற முன் மண்டபம், நடுமண்டபம், கருவறை இவற்றின் சுவர்கள், பதினான்கடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்கள், இருநூறு அடிக்கு மேற்பட்ட வானளாவ உயர்ந்து விளங்கும் விமானம், விமானத்திலுள்ள உருவச்சிற்பங்கள்விமானத்தைஅடுத்துள்ள மாளிகை ஆகிய அனைத்தும் சோழர்கால கட்டடத் திறனை நன்கு விளக்குகிறது.

### சிற்பக்கலை குறித்த ஓர் பார்வை

ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நவகண்ட சிற்பங்களாக பொன்னேசுவர மடத்தில் 16 உள்ளன. மற்றும் குந்தாணி, கெங்கராயன் கோட்டை, காரிமங்கலம் போன்ற இடங்களில் உள்ளன. பார்க்க வியப்பூட்டும் வகையில் படைப்பு சிற்பங்கள் மிக நேர்த்தியாக செதுக்கப் பட்டுள்ளன. சூளகிரியில் பேரிகை எனும் ஊருக்குச்செல்லும் சாலையில் வீரன் வில் எய்யும் நிலையிலும் அவன் மனைவி அம்பு எடுத்துக்கொடுக்கும் நிலையிலும் ஒரு சிற்பம் அற்புதமாய் உள்ளது. ஜெகதேவி எனும் ஊர்ப்பக்கம் ஒரு புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. ஒரு பெண்ணும் அவர் மகளையும் புலி அடித்துக்கொல்வதுபோல் அச்சிற்பம் உள்ளது வியக்கத்தக்கது.

### நாடகக் கலை

கூத்து அல்லது நாடகம் என்பது நுண் கலைகளுக்குள் ஒன்றாகும். வெளிநாடு களுடன் பன்னெடுங்காலமாக வாணிபம் செய்துவந்த தமிழர்-இயல், இசை கலைகளில் சிறந்து விளங்கிய இவர்கள் நாடக கலையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று கொள்ளுதல் மிகை ஆகாது. இயல், இசை இரண்டும் கேட்போருக்கு இன்பம் தருவன ஆனால் நாடகம் இன்பத்தோடு காட்சியின்பமும் பயப்பதாகும். எனவே நாடகமே மிக்க பயனுள்ளது என்று அறிவுடையோர் கூற்றாக இருந்தது.

நாடகம் முறையாக வளர்ந்து வந்தபோது இந்நாட்டில் வந்து தங்கி செல்வாக்கு பெற்ற ஆரியரும், சமணரும் நாடகம் காமத்தை மிகுதிப்படுத்துவது என்று தவறாக எண்ணினர். அதனால்தாம்செய்தநூல்களில் நாடகத்தின்மதிப்பைகுறைத்தனர். அவர்கள் செல்வாக்கு மிகுதி பட்டிருந்த காலத்தில் நாடக தமிழை வளரவிடாமல் தடுத்தனர். எனவே நாடக வளர்ச்சி படிப்படியாக குறைந்தது. பின்பு கி.பி. 7ஆம் 8ஆம்

நூற்றாண்டில் செய்யப்பெற்ற உதயணன் வரலாற்றைக்கூறும் பெருங்கதையிலும் நாடகத்தைப் பற்றிய சில கதைகள் காணப்படுகின்றன.

**"நயத்திறம் படைத்த நாடகம் கண்டு**
**நண்புணத்தெளித்த நாடகம் போல**
**வாயிற்கூத்தும் சேரிப்பாடலும்**
**கோயில் நாடகக் குழுக்களும் வருகென"**

இந்த வரிகள் மூலம் அரண்மனையில் நாடிப்போர் கூட்டம் இருந்தது புலப்படுகிறது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்க வாசகர் தமது திருவாசகத்தில் "நாடகத்தால் உன்னடியார்போல் நடத்து" என்று கூறியிருத்தலாலும், நம்மாழ்வார் "பிறவிமா மாயக்கூத்தினையே" என்று கூறியிருப்பதை பார்க்கும் போது கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் நாடகங்கள் நடித்துக்காட்டப்பட்டன என்பதை அறியலாம். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மாலிக்-காபூர் படைகளுக்கு பிறகு சேர, சோழ, பாண்டிய அரசுகள் நிலை தளர்ந்தன. விசயநகர வேந்தர் ஆட்சி சிறிது காலம் சமயத்தை பாதுகாத்தது அப்போது இசை நடனம் நாடகம் முதலிய கலைகள் புத்துயிர் பெற்றன.

**முடிவுரை**

17ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு நாடு பல துறைகளிலும் அல்லற்பட்ட காரணத்தினால் நாடகம் முதலிய கலைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. அதன்பிறகு நாம் வாழும் இவ்விருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடக கலை நன்கு வளர்ந்தது. இவ்வாறாக நம் நாட்டில் அனைத்து கலைகளும் வளர்ந்து இருந்தன. அறுபத்து நான்கு கலைகளில் சிற்பம், கட்டடக்கலை குறித்து பார்க்கும்போது நம் நாடு கலைகளில் சிறந்து விளங்கியது அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. முனைவர் மா.இராசமாணிக்கனார், பூம்புகார் பதிப்பகம் முதற்பதிப்பு: ஜூலை 2009 சென்னை - 600 108.
2. பா.துரைசாமி சேகர் பதிப்பகம் 66, பெரியார் தெரு முதற்பதிப்பு: 2010 சென்னை - 600 078.